**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – பகுதி – II திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு 2006–2007–ஆம் ஆண்டில் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குவதற்கு ரூபாய் ஐம்பது இலட்சம் செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (சஉதி–1) த் துறை

அரசாணை நிலை எண்.143 நாள் 27–09–2006

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண் 75 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 11.05.2005

2) சமூகநல இயக்குநரின் நக.எண்.57755/சஉதி/2005 நாள் 29.8.2006

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 22.8.2006ஆம் நாள் இத்துறையின் மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் சத்துணவு உட்கொள்ளும் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வாங்க 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று அறிவித்துள்ளார். 2006–07 ஆம் ஆண்டிற்குரிய பகுதி – II திட்டத்தின் கீழ் சத்துணவுத் திட்ட பயனாளிகளுக்கு ஒரு எவர்சில்வர் தட்டு மற்றும் ஒரு எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு சமூக நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

2) மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2006–07 ஆம் ஆண்டு பகுதி – II திட்டத்தின் கீழ் சமூகநல இயக்குநரின் கருத்துருவினை ஏற்று சென்னை மாநகராட்சி நீங்கலாக சத்துணவு மையங்களில் பயன்பெறும் 1,15,515 பயனாளிகளுக்கு ஒரு பயனாளிக்கு ஒரு எவர்சில்வர் தட்டு மற்றும் ஒரு எவர்சில்வர் டம்ளர் ரூ.33/– (ரூபாய் முப்பத்தி மூன்று மட்டும்) செலவினத்தில் வாங்கி வழங்குவதற்கு சமூகநல இயக்குநருக்கு ரூ.50.00 இலட்சத்தினை (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் 2006–07 திருத்திய வரவு செலவு திட்டத்தில் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் : -

> " 2236–சத்துணவு 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்கல். 102–மதிய உணவு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள். II–மாநிலத் திட்டம். KR–புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பயனீட்டாளர்களுக்கு எவர்சில்வர் டம்ளர்கள் மற்றும் தட்டுகள் வழங்குதல். 24–பொருட்களும் வழங்கலும்" (த.தொ.கு. 2236–02–102–KR–2400).

மேற்கண்ட செலவினம்2006–2007 திருத்திய வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப் படவேண்டும்.

4) மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கருவூலத்தில் பெற்று பின் நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ள சத்துணவுத் திட்ட பயனாளிகளின்

எண்ணிக்கையையும், தேவையையும் கருத்தில் கொண்டு உரிய தொகையை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரித்து அளிக்க சமூகநல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5) 2006–2007ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை தேர்வு செய்யவும், ஒப்பளிக்கப்பட்ட தொகையை பங்கீடு செய்யவும் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுவதை கண்காணிக்கவும் சமூகநல இயக்குநருக்கும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000–ன்படி, 2006–2007ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7) அனுமதிக்கப்பட்ட, நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்ியது குறித்து பயன்பாட்டுச் சான்றினை அரசுக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி சமூகநல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண் 57608/சந/06 நாள் 25.9.2006ன்படி வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நா.ச. [illegible]
அரசு செயலாளர்

பெறுநர்
சமூகநல இயக்குநர், சென்னை–5
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு),
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை/ கோவை
உதவி சம்பள மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–3
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/9/18/35

நகல்
நிதி (ச.ந., வரவு–செலவு பொ.–II)த் துறை, சென்னை–600 009( 2 நகல்கள்)
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட(சந–7)த் துறை, சென்னை–9
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை–25.
இ.கோ / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/